# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

வைணவம் என்பது விஷ்ணுவைத் தொழுவது மட்டும் அன்று. மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து உலகில் தானும் மகிழ்ந்திருந்து மற்றவரையும் மகிழ்வித்து வாழ்வைச் சிறப்புற அமைத்து இறுதியில் வைகுண்டம் செல்ல வேண்டும் என்று போதிப்பது தான் வைணவம். அதனால் தான் திருமங்கையாழ்வார், "இருங்கடல் உலகம் ஆண்டு வெண்குடைக்கீழ் இமயவர் ஆகுவர் தாமே" என்றும், "ஒதநீர் வையம் ஆண்டு வெண் குடைக்கீழ் உம்பரும் ஆகுவர் தாமே" என்றும் "வங்கமா கடல் வையம் காவலர் ஆகி வானுலகாள்வரே" என்றும் அருளுகிறார். வைணவன் வாழப் பிறந்தவன்! வாழ்விக்கப் பிறந்தவன்! அதனால் தான் இந்தக் கட்டுரைத் தொடருக்கு வாழ்விக்கும் வைணவம் என்று பெயர் தரப்பட்டது.

ராமாயண உபந்யாஸம் செய்கிறவர்கள் ஸ்ரீராமனுடைய குணங்களை–மங்களமான இயல்புகளை– பரக்க விரித்துப் பேசுவர். ஏனென்றால் மனிதரும் தம் வாழ்வில் அப்படி உயர்ந்த குணங்களோடு வாழவேண்டும் என்பதற்காக! "ஆத்மாநம் மானுஷம் மன்யே" (என்னை மனிதன் என்று நினைப்பதிலேயே பெருமை கொள்கிறேன்) என்று ராமன் சொன்னதும் அந்த நோக்கத்தில் தான். அவனை அடியொற்றி அனைவரும் வாழ்ந்தாலே நமக்கு ஒரு அற்புதமான சமுதாயம் உருவாகும்.

ராமனைப் பற்றிக் கூறும்போது வால்மீகி புருஷ வ்யாக்ரம் என்றும் நரசிம்மம் என்றும் வர்ணிக்கிறார் அவன் ஆண்களில் புலிபோன்றவன் சிங்கம் போன்றவன் என்பது தாத்பரியம். இதிலே இன்றைய இளைஞர்களுக்கு ஒரு செய்தி அடங்கியிருக்கிறது. ஆண்பிறப்பு என்பது ஒரு அற்புதமான வரம். உலகத்தில் புதுமைகளைப் படைத்து, தடைகளை உடைத்து, வாழ்வில் ஆக்கம் பெருக்கம், வசதிகளின் வளர்ச்சி, தீமைகளின் தளர்ச்சி, மக்களுக்கு நல்ல ஆட்சி ஆகியவற்றைக் கொடுக்கக் கூடிய திறமைகளை, பகவான் அவனுக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறார். ஆண்மகனுடைய உடல், இயல்பிலேயே உறுதியையும், வலிமையையும் வளர்த்துக் கொள்வதற்கு சாதகமாய் அமைந்தது. நம் புராணங்களிலும் இதிகாசங்களிலும் ஆண்மக்களின் சாதனைகள் அதி அற்புதமாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் வீரத்திலும் உடல் பலத்திலும் சமுதாயத்துக்கு வேண்டிய சாதனைகளை படைப்பதிலும் பூமியை சொர்க்கமாக மாற்றுவதிலும் வல்லவர்களாக

இருந்திருக்கிறார்கள். தேவர்களும் கண்டு மதிக்கும் ஆடவர் பூமியில் வாழ்ந்ததாக நமக்கு ஆன்மீகச் சரித்திரம் கூறுகிறது. ரஜி என்ற மன்னன் இந்திரனால் முடியாத காரியத்தை அதாவது இந்திரனால் தோற்கடிக்க முடியாத அரக்கர்களை இந்திரனுக்காக தோற்பித்ததாக விஷ்ணுபுராணம் கூறுகிறது. தசரதனுடைய ரதம் பத்துத் திசைகளுக்கும் சென்று கௌரவத்தை நிலைநாட்டக் கூடியது என்று அவனுடைய பெயரின் அர்த்தம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

ஊர்வசியும் கண்டு மோஹிக்கும் தோற்றம் பெற்றிருந்தான் புரூரவசு. அர்ஜுனனுடைய வீரமும் வில் திறமும் அவனி புகழும் வண்ணம் இருந்தது. இடது கையால்கூட அவன் அம்பு விடுபவன் என்ற பொருளில் அவனுக்கு "சவ்யசாசி " என்ற பெயரைக் கண்ணன் கீதையில் வழங்குகிறான். அவனுடைய அறிவாலும் நற்குணங்களாலும் ஆண்மையாலும் அவன் அகில இந்திய பெண்களாலும் விரும்பமாட்டான். புராணகாலம் முடிந்து மானிட வரலாற்றுக் காலம் தொடங்கியபின் நம் நாட்டை ஆண்ட மன்னர்கள் ஆண்மையின் மேன்மைகளைப் பறைசாற்றும் வண்ணமே வாழ்ந்தார்கள். பண்டைய ஆண் சமுதாயம் நிமிர்ந்த நெஞ்சம், நோயற்ற உடலும், கண்டோர் கதிகலங்கும் கண்ணொளியும் பெற்றிருந்தது. அகில உலக நாடுகளின் வியாபாரிகள், தூதுவர்கள், கவிஞர்கள், தலைவர்கள், மற்றும் மன்னர்கள் கண்டு மூக்கில் விரல் வைக்குமளவு வீரம், பலம், அறிவாற்றல் மனஅடக்கம் ஆகியவை உள்ளவர்களாக அன்றைய ஆண்கள் திகழ்ந்தார்கள். பண்டைய பெண் சமுதாயம் அன்றைய ஆடவரின் பாதுகாப்பில் எவ்விதக் கவலையும் இன்றி நிம்மதியாய்க் காலம் கழித்தது. 'சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை' என்ற பழமொழி அப்படித்தான் ஏற்பட்டது.

இன்றைய இளைஞர்களின் நிலை என்ன? பண்டைய ஆடவரின் வாரிசுகள் என்று தங்களைக் கூறிக் கொள்ள இவர்களுக்குத் தகுதி இருக்கிறதா? ராமன் தியாக உள்ளம் கொண்டவன். பிறருக்காகத் தான் துதன்பம் ஏற்றுக் கொள்பவன். மனைவியின் துயர் கண்டு தான் கண்ணீர் வடிப்பவன். எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாய் இருந்தவன். அழகாக கவி இயற்றுபவன். பிரமிக்கத் தக்க நினைவாற்றல் கொண்டவன். வீர சாகஸங்களில் வல்லவன். மன அடக்கத்துக்குப் பெயர் பெற்றவன். அவனைக் கண்ட மாத்திரத்தில் ராவணன் ஒடுங்கிப் போனான். அப்படி ஒளிபடைத்த கண்ணினன் அவன். இந்தச் சிறப்புகளில் ஏதாவது ஒன்றில் நூற்றில் ஒருபங்காவது இன்றைய இளைஞர்களுக்கு இருக்கிறதா? என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தனக்கு வரப்போகும் மனைவி எவ்வளவு பணம் கொண்டு வருவாள் என்று எதிர்பார்க்கும் பேடித்தனமும், கூடுமானவரை சிரமமின்றி சொகுசாக வாழ வேண்டும் என்ற சோம்பேறித் தனமும், ஆன்மீக நெறியைப் புறக்கணித்து மனம் போனபடி வாழும் மாக்கள் குணமும், அச்சம் சுயநலம் நோய்க் களஞ்சியமான உடல் ஆகியவை

கொண்ட பயனற்ற தன்மையும் ஆகியவை இல்லாமல் இன்றைய ஆடவர்கள் இருக்கிறார்களா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய கதைகளிலும், சினிமாக்களிலும், சீரியல்களிலும் ஆண்கள் துர்க்குணம் நிறைந்த பிசாசுகளாகவும், பெண்கள் நற்குணம் நிறைந்த தேவதைகளாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள். அதைக் கண்டும் இன்றைய இளைஞர்கள் விழித்தெழுவதில்லை. கோவிலுக்குப் போவது, பூஜைகள் செய்வது, உண்மையான மனித நேயத்தோடு வாழ்வது ஆகியவையெல்லாம் ஏதோ பெண்களுக்கே உரிய ஒருதலைப் பட்ச சொத்து என்பது போல ஆண்கள் வாழ்கிறார்கள். கேட்டால் கடமை ஆற்றுதலே கடவுள் வழிபாடு (work is worship) என்கிறார்கள். கடமையைச் செய்தால் மட்டும் போதுமா? கடமையைச் செய்கிறவர்கள் கடவுளை வழிபட வேண்டாம் என்று இவர்களுக்கு யார் சொன்னது? தவமிருந்து இந்த ஜென்மத்திலேயே தன் வருணத்தை மாற்றிக் காட்டிய விச்வாமித்திரனும், சூரியனிடம் ஸ்யமந்தகமணி பெற்ற சத்ராஜித்தும், சிவனிடம் பாசுபதம் பெற்ற அர்ஜுனனும், பவானியிடம் வீரவாள் பெபற்ற சத்ரபதி சிவாஜியும், ராமக்ருஷ்ணரிடம் உலகுவியக்கும் நாவன்மையைப் பெற்ற விவேகானந்தரும், ஆண்மக்கள் தானே! ஆண்களின் ஆன்மீகச் சாதனைகள் ஆயிரக் கணக்கானவை. அது ஏன் இன்றைய இளைஞர்களுக்கு மனதில் உறைப்பதில்லை?

வைணவத்துக்கு வந்து விட்டால் மனம் போனபடி வாழலாம் என்று ராமானுஜரும் சொல்லவில்லை. ஞானம் மற்றும் மோட்சம் ஆகியவற்றுக்கு சாதி தடையாக மாட்டாது என்று தான் அவர் சொன்னார். அதற்கு இன்று எத்தனை எத்தனை கொச்சையான விளக்கங்கள்? எத்தனை எத்தனை தவறான அர்த்தங்கள்? இளைஞனே! மனதை அடக்கு. உன் நிலையை உயர்த்திடு. விழிமின், எழுமின், உழைமின்!